சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:02.04.2025

PW1: நாகராஜன் த/பெ– பாண்டி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கு சொத்து சஞ்சீவ் நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சஞ்சீவ் நாயக்கருக்கு ராதாகிருஷ்ணன், பேபியம்மாள், பாண்டி ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பாண்டி என்பவருக்கு பெருமாள் என்பவர் வாரிசுதாரர் என்றும், மேற்படி பெருமாள் வாரிசுயின்றி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பேபியம்மாளுக்கு ஒரே வாரிசு நான் மட்டும் தான். ராதாகிருஷ்ணனுக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசு. ராதாகிருஷ்ணனுக்கு வாரிசு என்ற அடிப்படையில் ½ பங்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மீதி பங்கில் பெருமாளுக்கு போக தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராதாகிருஷ்ணனுக்கு மேற்படி பாகத்தில் இருந்து 3/8 பாகம் 1, 3, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதனால் 1, 3, 4 பிரதிவாதிகள் 3/8 பாகம் கேட்டு கோரியுள்ள எதிர்கோரிக்கை சரிதான் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ஒரு பகுதியில் நானும், மற்றொரு பகுதியில் 2ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பாகம் பிரிக்க விடாமல் 2ம் பிரதிவாதி தான் தடுத்து வருகிறார் என்றால் சரிதான். இறந்து போன வெங்கடேசன் அவரது தாயாருக்கும் சகோதரிக்கும் பாகம் கொடுக்காமல் தனித்து அனுபவம்செய்து வந்தார் என்றால் சரிதான்.

(5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)